**<u>இலங்கையில் மனித விற்பனையை எதிர்த்து போராடும் பொருட்டு மனித விற்பனைக்கு எதிரான "IMPACT" கருத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தல்</u>**

கொழும்பு - ஐக்கிய நாடுகளின் புலம்பெயர் நிறுவனமாகிய புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு (IOM), மனித விற்பனையைக் கண்காணிப்பதற்கும் அதற்கு எதிராக போராடுவதற்குமான அமெரிக்காவின் இராஜாங்கத் திணைக்களத்தின் நிதி உதவியுடன் மனித விற்பனைக்கு எதிராகப் போராடுவதற்கான மூன்றாண்டு கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும். "*மனித விற்பனையை எதிர்த்து போராடுவதற்காகவும் அது தொடர்பாக பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதற்காகவும் அரசாங்கம் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் ஆற்றலை வலுவூட்டுதல்*" (IMPACT) எனப் பெயரிடப்பட்டுள்ள இக்கருத்திட்டம் 2022 யூலை மாதம் 29ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றின் போது உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இக்கருத்திட்டத்தின் நோக்கம் யாதெனில், மனித விற்பனைக்கு எதிராக பயனுறுதி மிக்க வகையில் போராடுவதற்கும் அவற்றுக்கான பதிற்செயற்பாட்டினை வெளிப்படுத்துவதற்கும் வழியமைக்கும் வகையில் தேசிய மற்றும் பிரதேச/ சமுதாய மட்டத்திலான ஆற்றலை வலுவூட்டுதல், சமுதாயத்தினால் உந்தப்படும் பதிற்செயற்பாட்டினை உயர்த்துதல், மனித விற்பனையைக் கண்காணித்தல் மற்றும் அவற்றுக்கு எதிராக போராடுவதற்காகத் தேசிய மூலோபாய செயல் திட்டம் ஒன்றை (NSAP 2021-2025) பயனுறுதி மிக்க வகையில் நடைமுறைப்படுத்துவதற்குப் பங்களிப்பு வழங்குதல் ஆகியவையாகும். "IMPACT" கருத்திட்டம் பாதுகாப்பு அமைச்சின் தலைமையில் மனித விற்பனைக்கு எதிரான தேசியச் செயலணியுடன் (NAHTTF) மிக நெருங்கிய ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்தப்படும்.

மனித விற்பனை என்பது தேச எல்லைகளுக்குள்ளேயும் தேச எல்லைகள் ஊடாகவும் இடம்பெறுகின்ற ஒழுங்கமைந்த குற்றச்செயலாகும். இது ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிராகத் தாக்கத்தை விளைவிக்கின்ற குற்றச்செயலாக அமைவதுடன் இலங்கையின் தண்டனைச் சட்டக் கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தண்டனைக்கு உட்படக்கூடியதொரு குற்றமாகும். மனித விற்பனையில, கட்டாய உழைப்பு மற்றும் பாலியல் ரீதியிலான சுரண்டல் ஆகியவை உள்ளடங்கிய போதிலும் இவ்விடயம் அதற்கு மாத்திரம் மட்டுப்படுத்த முடியாத பல்வேறு கூறுகளைக் கொண்டவைகளாக அமையக்கூடும். இவ்வாறான குற்றச்செயலுக்கு எதிராகப் போராடுவதற்கு அரசு மற்றும் அரச சார்பற்ற தரப்புகளின் ஒருங்கிணைந்த பதிற்செயற்பாடு அத்தியாவசியமானதாக அமைகின்றது.

IOM நிறுவனமானது NAHTTF ஒத்துழைப்புடன் பணியாற்றுதல் உள்ளடங்கலாக மனித விற்பனைக்கு எதிராக பணியாற்றும் விடயங்களில் விரிவான அனுபவத்தையும் நீண்ட வரலாற்றினையும் கொண்டுள்ளது. இக்கருத்திட்டத்தின்கீழ் புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு நாடளாவிய ரீதியில் 11 மாவட்டங்களில் மனித விற்பனைக்கு எதிரான முன்னெடுப்புகளை நடைமுறைப்படுத்துவதற்கு சேவ் த சில்ரன் மற்றும் ஏனைய நான்கு சிவில் சமூக அமைப்புகளுடன் கூட்டாகப் பணியாற்றும்.

இக்கருத்திட்டத்தின் கீழ் பொதுமக்களை விழிப்புணர்வூட்டுதல், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அரச சார்பற்ற தரப்புகளுக்குப் பயிற்சியளித்தல், பாதிப்புக்கு உட்படக்கூடிய சமுதாயங்களைச் சென்றடைவதற்கான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல், மனித விற்பனையினால் பாதிப்படைந்தவர்களுக்கு உதவி வழங்குதல், தங்குமிட வசதிகள் மற்றும் புலனாய்வு முகவர் நிறுவனங்களை மேம்படுத்துதல், சிறுவர் விற்பனையைக் கட்டுப்படுத்துவதற்கு இடையீடு செய்தல், NAHTTF இற்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல், தேசிய ஆற்றுப்படுத்தல் பொறிமுறையினை வலுவூட்டுதல் மற்றும் மனித விற்பனையைத் தடுத்து நிறுத்துவதற்காகத் தனியார் துறையின் சுற்றாடல் சேவை வழங்குநர்களுடன் ஒத்துழைப்புடன் பணியாற்றுதல் மற்றும் மனித விற்பனை தொடர்பாக நெறிமுறை சார்ந்த வகையிலும் உண்மைத் தகவல்களை அடிப்படையாகக் கொண்ட வகையிலும்

அறிக்கையிடல் தொடர்பாக ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பிரதிநிதிகளைப் பயிற்றுவித்தல் உள்ளிட்ட விரிவான பல செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கருத்திட்டச் செயற்பாடுகள் மனித விற்பனை தொடர்பான புரிதலை மேம்படுத்தல், பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணுதல், பாதுகாப்பு சேவைகளை வழங்குதல் மற்றும் கிராமம் தொடக்கம் மத்திய அரசு வரையிலான அறிக்கையிடல் மற்றும் ஆற்றுப்படுத்தல் பொறிமுறையினை நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றை நோக்காகக் கொண்டுள்ளது.

*இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் மேதகு ஜூலி சங் அவர்கள் கருத்து தெரிவிக்கையில்*

*''இந்தப் புதிய கருத்திட்டத்தை கொண்டாடும் சந்தர்ப்பத்தில் 2022 TIP அறிக்கையில் காணப்படும் பல முக்கிய பரிந்துரைகளான (மனித விற்பனைக்கு) பலியானவர்களை செயலூக்கத்துடன் இனங்காணல், பலியானோருக்கான சேவைகளை மேம்படுத்துதல், சிறுவர் பாலியல் சுற்றுலாவை தடுப்பதற்கான முயற்சிகளை மேம்படுத்துதல், பாதுகாப்பான மற்றும் சட்டபூர்வமான புலம்பெயர்வை ஊக்குவித்தல், பேண்தகு முறையில் தொடரும் அரச ஒருங்கிணைப்பின் நிறுவனமயமாதலுக்கு ஆதரவளித்தல் போன்ற பல செயற்பாடுகளுக்கும் இக்கருத்திட்டமானது உதவியாகவிருக்கும் என்பதையிட்டு நாம் உற்சாகமடைகிறோம்''* எனக்கூறினார்.

IOM நிறுவனத்தின் உதவியை முன்னிலைப்படுத்தி புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான பணித்திட்டப் பிரதானி சரத் தாஸ் அவர்கள்,''இலங்கை அரசாங்கத்திற்கு, மனித விற்பனைக்கு எதிரான முன்னெடுப்புகளை வலுவூட்டுவதற்கு உதவி வழங்குவதை உறுதிப்படுத்தினார். சுற்றுச்சூழலின் சிக்கல்மிகு தன்மை, பாதிக்கப்பட்டவர்களை இனங்காணுவதில் நிலவும் சிரமங்கள், குற்றவாளிகளுக்கு எதிராக வழக்கு தொடரும் விடயத்தில் காணப்படும் சவால்கள் மற்றும் தொடர்ச்சியாக மாற்றமடையும் குற்றத்தின் தன்மை காரணமாக அரசு, சிவில் சமூகம், தனியார் துறை மற்றும் ஏனைய தரப்புகளிடமிருந்து கூட்டான மற்றும் விரிவான பதிற்செயற்பாடு அவசியமாக அமைகின்றது. ''IMPACT'' கருத்திட்டத்தின் ஊடாக ஊக்குவிக்கப்படும் கூட்டு முயற்சியின் ஊடாக மனித விற்பனைக்கு எதிரான பதிற்செயற்பாடுகளை பயனுறுதி மிக்க வகையில் வழங்குதல், மனித விற்பனையைத் தடுத்து நிறுத்துதல், பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாத்தல் மற்றும் குற்றவாளிகளுக்கு எதிராக வழக்குத் தொடுத்தல் போன்றவை இயலச் செய்யப்படுகின்றன'' எனத் தெரிவித்தார்.

இக் கருத்திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு வெற்றிகரமாக நடைபெற்றதுடன் பாதுகாப்பு அமைச்சின் தேசிய உளவுத்துறைத் தலைவர் மேஜர் ஜெனரல் ஜெ.ஆர் குலதுங்க, இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்காவின் தூதுவர் ஜூலி சங், புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பின் இலங்கை மற்றும் மாலைதீவின் பிரதானி சரத் தாஸ் உள்ளிட்ட பல்வேறு பங்கீட்டாளர்களும் பல கௌரவ அதிதிகளும் இச்சந்தர்ப்பத்தில் பிரசன்னமாகியிருந்தனர்.

மனிதவிற்பனையைக் கண்காணித்து, எதிர்த்து போராடுதல், அரச சார்பற்ற மற்றும் சிவில் சமூக அமைப்புக்களோடு மேலும் செயலூக்கத்துடன் வினையாற்றுதல் போன்ற தேசிய மூலோபாயச் செயல் திட்டத்தின் (2021-2025) நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான முன்னேற்பாடாகப் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கையின் மனித விற்பனைக்கு எதிரான தேசியச் செயலணியின் தலைமையில் செயலணிக்காக வேண்டி உத்தியோகபூர்வ இணையத் தளமொன்றை (www.nahttf.gov.lk) நிறுவியுள்ளது. இவ்விணையத்தளம் நிகழ்வின் போது உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மனித விற்பனைச் சம்பவங்கள் தொடர்பில் உதவுவதற்கும் ஆற்றுப்படுத்துவதற்கும் மனித விற்பனை குற்றச்செயல் தொடர்பாக தகவல்களை பெற்றுக்கொள்வதற்கும் IOM நிறுவனத்தின் 0766 588 688 என்ற நேரடித் தொலைபேசி இலக்கம் பாவனையில் உள்ளது. மேலதிக விபரங்கள் தேவையாயின் தயவுசெய்து நேரடித் தொலைபேசி இலக்கத்தினூடாக அல்லது இலங்கை IOM நிறுவனத்தின் iomcolombo@iom.int எனும் மின்னஞ்சல் ஊடாகத் தொடர்பு கொள்ளுங்கள்.

***

**மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து தொடர்பு கொள்க**

*மினோலி பி. டொன், பாதுகாப்புப் பிரிவு (PXU) பிரதானி, புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பின் இலங்கை மற்றும் மாலத்தீவு தொலைபேசி 0777 409 409, மின்னஞ்சல்: mdon@iom.int*